செ.வெ.எண்: 38 / ஏப்ரல் /2020 நாள்: 13.04.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் திருச்சிராப்பள்ளி மாவட்ட கொரோனா வைரஸ் நோய் தடுப்பு கண்காணிப்பு அலுவலர் டாக்டர் ஆர்.அனந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு.சைலேஷ்குமார் யாதவ்,இ.கா.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் சுகாதாரத்துறை, காவல்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் (13.04.2020) நடைபெற்றது.**

-------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் திருச்சிராப்பள்ளி மாவட்ட கொரோனா வைரஸ் நோய் தடுப்பு கண்காணிப்பு அலுவலர் டாக்டர் ஆர்.அனந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு.சைலேஷ்குமார் யாதவ்,இ.கா.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் சுகாதாரத்துறை, காவல்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் (13.04.2020) நடைபெற்றது.

**இந்த ஆய்வுக் கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்ட கொரோனா வைரஸ் நோய்தடுப்பு கண்காணிப்பு அலுவலரும், நிதித்துறை அரசின் சிறப்பு செயலர் டாக்டர் ஆர்.அனந்தகுமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :**

நமது மாவட்டத்தில் நடைபெறுகின்ற களப்பணியை ஒருங்கிணைக்க பொறுப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. மாவட்ட குழுக்களோடு இணைந்து மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்டியாக பணிகளை திறம்பட ஒருங்கிணைந்து பணியாற்றவுள்ளேன். கொரோனா நோய் தொற்று உள்ளவர்கள் என பரிசோதனையில் கண்டறியப்பட்டு அவர்களுடைய குடும்ப தொடர்புகள் மற்றும் தொடர்பில் உள்ளவர்களின் விவரங்கள் தினந்தோறும் சேகரித்து மேல்நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

நோய் தொற்று உள்ளதாக சந்தேகிக்கும் நபர்களையும், நோய் தொற்று உள்ளவர்களின் குடும்ப நபர்களையும் உடனுக்குடன் 100 சதவிகிதம் சோதனைக்கு உட்படுத்த வேண்டும். இதற்கு மாதிரி சேகரித்தல், சோதனை செய்தல் மற்றும் அதன் முடிவுகளை விரைந்து வெளியிட வேண்டும். தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் (Containment area) தினந்தோறும் ஆய்வு செய்யப்பட்டு, நோய் தொற்று உள்ளவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றனரா என்பதை கண்காணிக்கப்பட வேண்டும்.

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசியப் பொருள்கள் நோய் தடுப்பு பகுதிகளுக்கும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கும் விநியோகம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தப்படுவதுடன், பொதுமக்கள் வீட்டிலேயே தங்கி இருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மருத்துவ உபகரணங்கள், பாதுகாப்பு கவசங்கள் போன்றவை போதுமான அளவு உள்ளதா என்பதையும், அவை முறையாக பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும் சுகாதாரத்துறையினர் கண்காணிக்க வேண்டும்.

நோய்தடுப்பு மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு வெளியிலுள்ள மாவட்டத்தின் பிறபகுதிகளில் கொரோனா தொற்று போன்ற அறிகுறியான கடுமையான மூச்சிறைப்புக்கு சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் விபரங்கள் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் முறையாக சேகரித்து அவர்களுக்கு கொரோனா தொற்று உள்ளதா என்பதை கண்காணித்து உறுதி செய்ய வேண்டும். தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் கொரோனா தொற்றுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள், சுகாதாரத்துறையின் வழிமுறைகளுக்குட்பட்டு செய்யப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும்.

நோய்தடுப்பு, கிருமி நாசினி மருந்துகள் பொதுமக்கள் கூடும் இடங்களிலும், மருத்துவமனைகளிலும் முறையாக தெளிக்க வேண்டும். ஊரடங்கு காலத்தில் ஏழை, எளிய மக்களின் துயர் துடைக்க அரசு அறிவித்துள்ள நியாயவிலைக் கடைகளில் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1000 மற்றும் அரிசி, பருப்பு, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்ற உணவுப்பொருட்கள் விலையில்லாமல் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும். சிகிச்சை அளிக்கும் மருத்துவப் பணியாளர்களுக்க நோய்தடுப்பு முன்னெச்சரிக்கையாக கிருமி நாசினி, மாஸ்க், மருத்துவருக்குத் தேவையான பாதுகாப்பு உடைகள் வழங்க வேண்டும். இவ்வாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட கொரோனா வைரஸ் நோய்தடுப்பு கண்காணிப்பு அலுவலரும், நிதித்துறை அரசின் சிறப்பு செயலர் டாக்டர் ஆர்.அனந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

**காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு.சைலேஷ்குமார் யாதவ்,இ.கா.ப., அவர்கள் தெரிவித்ததாவது :**

அத்தியாவசியப் பொருட்கள் ஏற்றிவரும் லாரிகள் மற்றும் வாகனங்களை காவல்துறையினர் தடை செய்யக் கூடாது. மேலும், அத்தியாவசியப் பொருட்களை ஏற்றுவதற்காக காலியாக செல்லும் வாகனங்களையும் தடை செய்யவோ, தடுக்கவோ கூடாது. பொதுமக்கள் சமூக இடைவெளியை கடைபிடிக்கிறார்களா என்பதை காவல்துறையினர் கண்காணிக்க வேண்டும். மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட பகுதியில் காவல்துறையினர் பணியில் இருந்து முழுமையாக கண்காணிக்க வேண்டும். தடைசெய்யப்பட்ட பகுதியில் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கு உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு.சைலேஷ்குமார் யாதவ்,இ.கா.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கையாக மாவட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள பல்வேறு நிலைகளில் துண்டு பிரசுரங்கள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது தொடர்பாகவும், மக்கள் காந்தி மார்கெட்டில் கூட்டம் கூட்டமாக காய்கறி வாங்கச் செல்வதை தவிர்த்திடும் வகையில் மாநகரில் பல்வேறு இடங்களில் புதிதாக தற்காலிக காய்கறி சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளது தொடர்பாகவும் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் மாநகர காவல் ஆணையர் திரு.வி.வரதராஜு,இ.கா.ப., சரக காவல்துறை துணைத்தலைவர் திரு.வி.பாலகிருஷ்ணன்,இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜியாவுல்ஹக்,இ.கா.ப., மாநகர காவல் துணை ஆணையர் (சட்டம் ஒழுங்கு) திருமதி.என்.எஸ்.நிஷா,இ.கா.ப., ஸ்ரீரங்கம் சார்-ஆட்சியர் திரு.சிபி ஆதித்யாசெந்தில்குமார்,இ.ஆ.ப., துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்)) டாக்டர் சுப்ரமணி, மகாத்மாகாந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் வனிதா, மாநகராட்சி ஆணையர் திரு.சிவசுப்ரமணியன், மாநகராட்சி நகர்நல அலுவலர் டாக்டர் ஏ.ஜெகன்நாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**